# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 09 வியாழக்கிழமை (22-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 145

### வான், தரை, கடல் வழித் தாக்குதல்கள்

# ஆனையிறவு பகுதியில் நேற்று 5 மணி நேரம் கடும் சண்டை!

## முன்னேற முயன்ற படையினர் புலிகளால் துரத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

ஆனையிறவுப் பகுதியில் நேற்றுக் காலை வான், தரை, கடல் ஆகிய மூன்று வழிகளிலும் தாக்குதல் நடத்தியவாறு இரு முனைகளில் முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஐந்து மணி நேரம் கடும் சண்டை நடைபெற்றது.

முன்னேற முயன்ற படையினர் புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாது பின்வாங்கித் தமது நிலைக்குத் திரும்பியதாக அறிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் ஆனையிறவு ரயில் நிலைய காவலரண்களிலிருந்து இரு டாங்கிகள் சகிதம் இராணுவத்தினர் கறுக்காய் கடற்கரைப் பக்கமாக இரு முனைகளில் முன்னேறினர்.

சுமார் எண்ணூறு மீற்றர் தூரம் வரை முன்னேறிய படையினரை வழிமறித்து, விடுதலைப் புலிகள் ஐந்துமணி நேரமாகக் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

முன்னேற முயன்ற படை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய நடவடிக்கையில் இரண்டாயிரம் துருப்புகள்

நேற்று ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் சுமார் இரண்டாயிரம் துருப்புகள் ஈடுபட்டன.

இராணுவத் தரப்பில் இவ்வாறு தகவல் வெளியிடப்பட்டதாக பி.பி.ஸி. அறிவித்தது.

இயக்கச்சியிலிருந்து, ஆனையிறவு — சாவகச்சேரி வீதியில் படையினர் முன்னேறியதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## கிளைமோர் தாக்குதலில் இரு சிப்பாய்கள் மரணம்

கொழும்பு, ஏப். 22

ஆனையிறவு படையினரின் வடமேற்கு முன்னணி நிலைகளில் இருந்து நேற்றுக் காலை முன்னேற முயன்ற துருப்புகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர்; மற்றும் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இம் மோதலின் போது ஸ்ரீலங்கா இராணுத்தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக விவரங்களை பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிடவில்லை. (உ-5)

## இயக்கச்சிப் பிரதேசத்தில் விடாது விமானக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம் ஏப். 22

ஆனையிறவுக்கு அருகே சண்டை நடைபெற்ற பகுதிகளிலும் மற்றும் புதுக்காட்டுச் சந்தி, பளை, தாளையடி, இயக்கச்சிப் பகுதிகளிலும் நேற்று கடும் விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

விமானங்கள் மாறிமாறி இப்பகுதிகளில் குண்டுகளை வீசின நேற்று மாலை 3 மணி வரை விமானத்தாக்குதல்கள் தொடர்ந்தன.

புதுக்காட்டுச் சந்தியில் புக்காரா விமானம் நடத்திய குண்டு வீச்சினால் 10 அடி ஆழமான குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

விமானத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கிடைக்கவில்லை.

குடாநாட்டு வான்பரப்பில் நேற்றுக் காலை முதல் அடிக்கடி பறந்து திரிந்த புக்காரா மற்றும் பொம்மர்களின் சத்தத்தால் குடாநாட்டில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுத் தாக்குதல் நடத்த புலிகள் குழு கொழும்பில்!

### பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 22

கொழும்பில் ஹோட்டல்கள், வங்கிகள் போன்ற முக்கிய நிலையங்களைத் தாக்குவதற்காக விடுதலைப் புலிகளின் குழு ஒன்று கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் இவ்வாறு எச்சரித்திருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

தெற்கில் மாகாணசபைத் தேர்தல் பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில் பாதுகாப்பு அமைச்சு இத்தகைய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. (உ-6)

## கடும் ஷெல் தாக்குதல்கள்

ஆனையிறவை அண்டிய பகுதிகளில் இருந்து படையினர் ஏவிய ஷெல்கள் இயக்கச்சி, எழுதுமட்டுவாள், பளை ஆகிய பகுதிகளில் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன.

நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் ஆரம்பமான ஷெல் தாக்குதல்கள் நேற்று மாலை வரை விட்டு விட்டுத் தொடர்ந்ததாக எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஷெல் தாக்குதல்களினால் பளை வரையான பகுதிகள் அதிர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## மிக முக்கிய நடவடிக்கையாம்

மணிலா, ஏப். 22

ஆனையிறவுப் பகுதியில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் இடம்பெறும் மூக்கிய முன்னணி நடவடிக்கையாகும். இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (உ-6)

### தோல்வியைத் தவிர்ப்பதற்காக

## தேர்தலை தள்ளிப் போட அரசின் திட்டம் இது!

கொழும்பு, ஏப். 22

மாகாணசபைத் தேர்தலில் மேல் மாகாணத்தில் அரசு பெரும் தோல்வியை எதிர்நோக்குகிறது. அதைத் தவிர்ப்பதற்காக தேர்தலைத் தள்ளிப் போட அரசு திட்டமிடுகிறது. அதற்காகத் தான் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்காக கொழும்புக்குள் புலிகள் குழு வந்திருக்கிறது என்ற பிரசாரத்தை அரசு ஆரம்பித்திருக்கிறது.

— இவ்வாறு தென்பகுதி அரசியல் விமர்சகர்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பரவலாக ஹெலி வேட்டு பெண் ஒருவர் காயம்

பளை, புலோப்பளை, புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் நேற்று பரவலாக ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் இடம் பெற்றன.

நேற்றுக் காலை 6.40 மணியளவில் புலோப்பளைப் பகுதியில் நின்ற வாகனங்களை நோக்கி ஹெலியிலிருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

திடீரென இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானதை அடுத்து, தமது இடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்களை நோக்கியும் ஹெலிகள் தாக்குதல்கள் நடத்தின.

ஹெலித் தாக்குதலினால் இயக்கச்சி பேராலைப் பகுதியைச் சேர்ந்த சிவகுரு இராசம்மா (வயது 48) என்ற பெண்மணி காயமடைந்தார். அவர் பின்னர் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை —

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கிளாலிப் பகுதியில் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

## நேற்று ஊரடங்கு

கொழும்பு, ஏப். 22

ஆனையிறவில் நேற்று இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து—

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்றுக் காலை 5 30 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக நேற்றுப் பகல் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது.

ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப்பட்டதாகவும் பின்னர் அறிவிக்கப்பட்டது.

## மோட்டார் ஊர்திப் பதிவு வேலைகள் நேற்று ஆரம்பம்

தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவு வேலைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கோண்டாவில் மோட்டார் ஊர்திப் பதிவு செயலகத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன், பதிவு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு வேலைகள் ஆரம்பமாகி

( 5ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கிளாலி படகுச் சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உணவு முத்திரைகள் இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம் ஏப். 22

இடம் பெயர்ந்த மக்களுக்கு புதிய உணவு முத்திரைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு இன்று முதல் புதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட உள்ளன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் கா. குணராசா இதனை நேற்றுத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு 'இ' உலர் உணவு அட்டையின் படியே இதுவரை உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால் இம் மாத இறுதியில் இருந்து புதிய விசேட உணவு முத்திரைகளுக்கே உணவுப் பொருள்கள் வழங்கப்படும். (இ-17)

# விளையாட்டுநிகழ்வுகள்

மயிலணி, ஏப். 22

ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் கழக அணிகள் வருமாறு:-

★ மல்லாகம் ஜொலி யோய்ஸ் வி. க. அணி எதிர் இளவாலை யங் ஹென்றீஸ் வி. க. அணி

★ மயிலங்காடு ஸ்ரீ முருகன் வி. க. அணி எதிர் ஊரெழு றோயல் வி. க. அணி (உ-89)

o o o

சுன்னாகம் சூராவத்தை குழந்தைகள் விளையாட்டுக் கழகத்தின் 13 ஆவது விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவில் யாழ். மிட் ரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பற்றீஷியன் கோல்ட் அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதும். இந்த ஆட்டம் இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடைபெறும். (உ)

o o o

யாழ். டேபிள் டென்னிஸ் சங்கம் நடத்தும் முதலாவது டேபிள் டென்னிஸ் சுற்றுப் போட்டி நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது. நாளையும், நாளை மறுதினமும், ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான மாணவர் பொது அறையில் இச்சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நடைபெறும். (உ)

# வெப்ப நோய்களினால் குடாநாட்டில் பலர் பாதிப்பு

தற்போதைய கடும் வெப்பத்தினால் குடாநாட்டில் நோய்களினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

சூட்டுப்பாரு, சின்னமுத்து, பொக்குளிப்பான். கண் எரிவு, கண்ணோய், காய்ச்சல், வயிற்றுளைவு, வாய் அவியல் போன்ற நோய்கள் பரவலாகக் காணப்படுகின்றன.

இந்த நோய்களினால் பாதிக்கப்பட்ட பலர் தினமும் யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்று செல்வதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-17)


# VACANCY

**Post of ENGLISH TYPIST CLERK (Female)**

**St. John's College Welfare Association, Jaffna.**

**Qualifications:**

G. C. E. (O/L) 6 (Six) Subjects with credit passes in English, Tamil, Maths, Passed Type - Writing with credit or Higher grade at any recognised Institution.

Higher qualifications and experience in this field will be an added qualification.

Age limit: 20 — 30 yrs.

Date of closing of application: 28-04-1993

Manager,

St. John's College,

JAFFNA.

(C-5023)



COUNCIL OF NGOs JAFFNA

## ஊனமுற்றோர் உதவித் திட்டம் / விதவைகளுக்கான உதவித் திட்டம்

யாழ். மாவட்டத்தில் இவ் உதவித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடனான ஓர் கலந்துரையாடலை ஏற்படுத்த உள்ளதால் மேற்படி நிறுவனங்கள் தமது பெயர், விலாசங்களை எதிர் வரும் 27-04-93க்கு முன்னதாக இணையக் காரியாலயத்திற்கு நேரிலோ அல்லது கடித மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,

100, இராசாவின் தோட்டம்,

யாழ்ப்பாணம்.

(சி-5032)


# இன்று

யாழ்ப்பாணம், ஏப். 22

சுகநலம் தொடர்பான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணியளவில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெறும். தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக சேவையாளர்கள் பலரும் இக் கருத்தரங்கில் பங்கு பற்றுவர். (உ-162)

# கொழும்பில் மோசமான வெப்பம்

கொழும்பு, ஏப். 22

மிக மோசமான வெப்பம் காரணமாக இரவில் நித்திரை கொள்ள முடியாமல் இருப்பதாக கொழும்பில் உள்ள குடியிருப்பாளர்கள் முறையிட்டுள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில் நிலவும் கால நிலையே இதற்குக் காரணம் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. (ஒ-எ)

# நாளை

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ் பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகு வழங்கும் சுகவாழ்வு — பொது விரிவுரைத்தொடரின் 4 ஆவது அமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 முதல் 12 வரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் ''நந்தி'' தலைமையில் இடம்பெறவுள்ள 4 ஆவது அமர்விலே; ஊட்டச்சத்தும், உடல் நலமும் எனும் பொருளில் வைத்திய கலாநிதி க. சிவபாலனும், எமது உணவுப் பழக்க வழக்கங்கள் என்ற பொருளில் வைத்திய கலாநிதி ந. சிவராசாவும் விரிவுரைகளை வழங்கவுள்ளார்கள்.

இந்த விரிவுரையில் பதிவு செய்தோர் மாத்திரமன்றி, ஆர்வமுள்ளவர்களும் வந்து கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# திருமுறை பெருவிழா 3 ஆம் நாள் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப். 22

இணுவில் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் நடைபெற்றுவரும் திருமுறைப் பெருவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று வியாழன் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

மாலை 6-30 மணிக்கு கவிமாமணி வீரமணி ஐயர் தலைமையில் கவியரங்கும், இரவு 8-30 மணிக்கு இளைஞர் அரங்கம் — சுழலும் சொற்போர் நிகழ்ச்சியும் இடம் பெறும். இளைஞர் அரங்கத்துக்கு கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் நடுவராகப் பணிபுரிவார். (ஒ)

# அநாதை இல்லம் அமைக்க முயற்சி

உடுவில், ஏப் 22

யாழ் குடாநாட்டில் அநாதை சிறுவர்களை பராமரிப்பதற்கென அநாதைகள் சிறுவர் இல்லம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அநாதைகள் சிறுவர் இல்லம் அமைப்பதில் யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட். திரு. எம்.எ.பயஸ் அடிகளார் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். (க-152)

# வட்டு.லயன்ஸுக்கு அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஏப். 22

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்திற்கு நூறு மூக்குக் கண்ணாடிகள் கொழும்பிலுள்ள மாவட்ட லயன்ஸ் கழகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மூக்குக்கண்ணாடிகள் [illegible] விநியோகிக்கப்பட இருக்கிறது. (ஒ-135)

# மரண அறிவித்தல்கள்

## குமாரவேலு முருகேசு (மாணிக்கம்)

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது 217/1, கடைச்சாமி ஒழுங்கையில் வசித்துவருமான குமாரவேலு முருகேசு (மாணிக்கம்) 11-04-1993 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், மகாதேவன் விமலாதேவியின் அன்புத் தந்தையாரும், சண்முகநாதன், சவுந்தலாதேவியின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
விமலாதேவி.
[மகள்]

217/1, கடைச்சாமி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (25336)

## குழந்தைவேலு கணநாதன்

பருத்தித்துறை ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு கணநாதன் (இளைப்பாறிய சிறைச்சாலை அத்தியட்சகர், தர்மகர்த்தா, கதிர்காமம் தெய்வானை அம்மன் தேவஸ்தானம்) இம் மாதம் முதலாம் திகதி கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு (முன்னாள் தபாலதிபர், பருத்தித்துறை), சீதேவிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், பார்வதியின் பாசமிகு கணவரும், ஜெயக்குமார் (உறுப்பினர், பொதுச் சேவை ஆணைக்குழு, கல்விச் சேவைச் சபை), அனுஷியா, இந்திரக்குமார், இருஷ்ணகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்

தகவல்: எஸ். மகேந்திரன்.

137, கம்பல் பிளேஸ்,
பொரளை, கொழும்பு-8. (25330)

## திருமதி வள்ளியம்மை இராசசபை

கோப்பாய் வடக்கு வராம்பற்றையை பிறப்பிடமாகக் கொண்ட வள்ளியம்மை இராசசபை 20-04-93 அன்று இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு சிந்தாமணி தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களாகிய K. T. அரசு (மலேசியா), கணபதிப்பிள்ளை, நடராசா, சின்னத்துரை, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசசபை (ஆங்கில ஆசிரியர்)யின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி (Dental Surgeon, Australia), விக்கினேஸ்வரி (Vet. Surgeon, Australia), காலஞ்சென்ற புவேனந்திரன் ஆகியோரின் தாயாரும், Dr. சச்சிதானந்தம், Dr. இரத்தினமோகன் ஆகியோரின் மாமியும், சஞ்சே, மஞ்சுளா, பார்த்தீபன், கல்பனா, அஞ்சனா, லக்ஷ்மன், அகிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-04-93 புதன்கிழமை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சிவப்பிரகாசம்.

குருக்கள் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு. (25334)

## தம்பு சோமசுந்தரம்

தம்பு சோமசுந்தரம் காலமானார். அன்னார் கல்வியங்காடு மார்கட் உத்தரவு பெற்ற வர்த்தகரும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், உத்தரவு பெற்ற வர்த்தகர் பொன்னுத்துரை, முன்னாள் சுகந்தி மில்ஸ் உரிமையாளர் காலஞ்சென்ற ஐயாத்துரை, செல்லம் என அழைக்கப்படும் மீனாட்சிப்பிள்ளை, பொன்னம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசம்மா, தங்கம்மா, காலஞ்சென்ற வைத்தியர் இராசையா, பண்டிதர் இராசையா ஆகியோரின் அன்பு மாமனாரும், —

காலஞ்சென்ற சிவக்கொழுந்து, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், உத்தரவு பெற்ற வியாபாரி ஸ்ரீ ரங்கநாதன், குலேந்திரன், யோகநாதன், பாலேந்திரன், கேதீஸ்வரன், திருமதி காந்திமதி ஜெகநாதன், துவாரகா மில்ஸ் உரிமையாளர் பாஸ்கரன், பிரபாகரன், சுதாகரன், திருமதி சுமதி சண்முகதாஸ், திருமதி சுகிர்தா நித்தியானந்தன், திருமதி சுகந்தி சிறிகாந்தன், சுமணா, திருமதி இந்திராதேவி கனகலிங்கப், சண்முகராசா, Dr. சிறி ரவீந்திரராசா, சிறிதரன், சிறிபதி, சிறிசிவகுமாரன், சிறிகாந்தன், சிறி இந்திரன், சிறிரங்கன், காஞ்சனா, திருமதி நாகபூசணி புஸ்பராசா, திருமதி நிர்மலா தனபாலசிங்கம், நிர்மலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல. 59 அரச வீதியிலுள்ள இல்லத்தில் இன்று (22-04 93) காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சோ, பொன்னுத்துரை

இல. 59, அரச வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (25338)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு நேரங்களில் வீடுகளில் தங்க அஞ்சும் மக்கள்

பணிப்புலம், சாந்தை, சுழிபுரம் வடக்கு, சில்லாலை, வடலியடைப்பு, பண்ணாகம் பகுதி மக்கள் இரவு நேரங்களில் தமது வீடுகளில் தங்குவதற்கு அஞ்சுகின்றனர்

இப்பகுதிகளை நோக்கிப் படையினர் ஷெல் தாக்குதல் நடத்துவதே இதற்குக் காரணம் ஆகும்.

இவ்வாறு வீடுகளில் இருந்து வெளியேறிய மக்கள் பலர் கடந்த திங்கள்அன்று வழக்கம்பரை, சுழிபுரம் கிழக்குப்பகுதிகளில் குழுமி நிற்கக் காணப்பட்டனர்.

(இ-28)

## திருமலையில் இணைப்புக் கல்லூரி

திருகோணமலையில் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியையும், தொழில்நுட்பக் கல்லூரியையும் அடுத்த மாதம் 23ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸா திறந்து வைப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம் ஏப். 22

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க ''இ'' அட்டைக்கு மார்ச் மாத கடைசி இரு வாரங்களுக்குரிய உலர் உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (இ)

## இலவச பால்மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 22

இராணுவ நடவடிக்கையால் குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்த 1—3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா வகைகள் வழங்க சன்மார்க்கசபை நடவடிக்கை எடுத்துள்ளது

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மயிலணி ஒழுங்கையில் இயங்கும் சபையின் தற்காலிக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## அறவழி மாணவர்களின் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

அறவழிப் போராட்டக்குழுவின் கல்வித்திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கான விடுமுறை காலச் சந்திப்பு ''உறவு கொண்டு உயர்வுபெறுவோம்'' என்னும் தலைப்பில் நாளை வெள்ளிக்கிழமை அறவழி செயலகத்தில் உபதலைவர் திரு. சி. ச. தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ். மாவட்ட இணைப்பாளர் திரு. ஜோன் குட்கான்ட் அவர்களும், முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவி அரச அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் திரு. கே. கணேசலிங்கம், யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் சிங்கராசா, மற்றும் விடுதலைப் புலிகள் இயக்க பிரமுகர்களும் கலந்து கொள்கிறார்கள்.

இராணுவ வன்செயல்களினால் குடும்பத் தலைவனை இழந்த குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 147 மாணவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அராலித்துறை: படையினரின் மின் விளக்குகள்!

வட்டுக்கோட்டை, ஏப் 22

அராலித்துறையில் நிலைகொண்டிருக்கும் படையினர் நீளமான கரையோரப் பகுதியில் பிரகாசமான மின்விளக்குகளைப் பொருத்தியிருக்கின்றனர்.

அதேசமயம் படையினர் தமது நிலைகளில் இருந்து பிரகாசமான தேடுதல் வெளிச்சத்தையும் கடல் பக்கமாக அடிக்கடி பாய்ச்சுகின்றனர்.

(ஒ 161)

## உற்பத்தி எழுச்சி வார போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 22

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதி எதிர்வரும் மே தினத்தை முன்னிட்டு பனை மரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல் ஆகிய போட்டிகளை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது

போட்டியிலே கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(இ)

# யாழ். விஞ்ஞான சங்க விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் யாழ் பல்கலைக் கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் இன்று காலை 8மணி தொடக்கம் நடைபெறும்.

ஆறு பகுதிகளாக நடைபெறும் இன்றைய நிகழ்ச்சிகளில் பல்வேறு விஷயங்கள் பற்றிய 38 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும்.

பிற்பகல் 3-15 மணிக்கு 'க. பொ த (உயர்தர) மாணவர்களின் விலங்கியல் பாடத்திட்டம்' பற்றிய பேராசிரியர் எஸ். வி பரமேஸ்வரனும், பிற்பகல் 4மணிக்கு டாக்டர் ஆர். தெய்வேந்திரன் 'எய்ட்ஸ் ஆராய்ச்சியில் சமீப கால வளர்ச்சி' பற்றியும் உரை நிகழ்த்துவார்கள்.

(க)


## ஷப்றா கிண்ணத்துக்காக

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்

கிரிக்கெட் சுற்றுப் போட்டி - 1993

30 ஓவர்களைக் கொண்ட மேற்படி சுற்றுப் போட்டிக்காக கழக அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு தினம்: 29 — 04 — 1993
மாலை 5.00 மணி

அணி ஒழுங்குத் தெரிவு: 30 — 04 — 1993
மாலை 4-00 மணி
யாழ். இந்துக் கல்லூரியில்

ஆட்டங்கள் நடைபெறும் தினங்கள்:
மே மாதம் 5, 6, 7, 8, 9, 15 16 ஆம் திகதிகள்

விண்ணப்பக் கட்டணம்: அணிக்கு ரூபா 400/-

விண்ணப்பப் படிவங்களை இல. 15, இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதியில் உள்ள உதயன், யாழ் நகரப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

க. தர்மகுலசிங்கம்,
செயலாளர்
போட்டிக் குழு,
ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.

(கி-4939)



JAFFNA SCIENCE ASSOCIATION
ANNUAL SESSION-1993

President's Address
By
Prof. C. SIVAGNANASUNDRAM
On
"Undergraduate Research in the University of Jaffna"
23 — 04 — 1993 (Friday) at 2.00 p.m.
KAILASAPATHY HALL
ALL ARE WELCOME (C-5029)


## ஆசியுரைக்கின்றேன்

''வாழ்க அந்தணர்'' என்ற திருமறை வாக்குக்கொப்ப சிவாச்சாரியார்களை கௌரவிக்கும் பணி மேன்மையானது. சிவசின்னங்களான விபூதி, உருத்திராக்கம் சைவ சமயிகளால் பெரிது போற்றப்படுகின்றன. இவை நிலைக்க வேண்டுமென்பதற்காக சிவனது ஆனந்தக் கண்ணீரென வர்ணிக்கப்படும் உருத்திராக்க மணியில் தங்கத்திலான முடியமைத்தும் தங்கப்பதக்கம் வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் என்னைக் கௌரவித்துள்ளார்கள்.

இவ் அன்புப் பணியினை அண்மையில் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய இவ்வாண்டு மகோற்சவத்தின் போது ஆலய பரிபாலன சபையினர் செய்தனர். குறிப்பாக ஆலய பரிபாலன சபையினர் இப்பணியினை செய்வதற்கு எனக்குரிய கௌரவங்களை வழங்குவதற்கு முன்வந்து ஆதரவு வழங்கிய திரு. கே. தர்மகுலசிங்கம் அவர்களை வாழ்த்துகின்றேன் திரு தர்மகுலசிங்கம் அவர்களுக்கும், இவ் ஆலய பரிபாலன சபைத் தலைவர் அவர்களுக்கும் ஏனைய அறங்காவலர்களுக்கும், வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் திருவருள் பாலித்து அவர்கள் சீரும் சிறப்புடன் நீடூழி வாழ்கவென வாழ்த்தி ஆசியுரைக்கின்றேன்.

இங்ஙனம்:
சு. கைலாசநாதக்குருக்கள்
வண்ணை. சிவன்கோவில்.

1993-04-22.

(சி-4942)


## இணுவையம்பதியில் திருமுறைப் பெருவிழா

காலம்: 1993 ஏப்ரல் 22, 23 பிற்பகல் 4 மணி
இடம்: இணுவில் கந்தசுவாமி கோவில்

இன்றைய நிகழ்ச்சிகள்:

மங்கள இசை:
நாதஸ்வரம்: S K. உதயநாதன், R. கோவிந்தராஜன்,
தவில்: S K சச்சிதானந்தம், K நாகேந்திரம்

பண்ணிசை: இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவர்கள்.

தலைமையுரை; திரு க. தேவராசா M. A.
வரவேற்புரை: செ. இலகுநாதன்
ஆசியுரை: சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ இ. ஸ்ரீதரக்குருக்கள்
தொடக்கவுரை: பேராசிரியர்- பொ. பாலசுந்தரம்பிள்ளை
கவியரங்கு: தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்
தலைவர்: கவிமாமணி வீரமணி ஐயர்

பண்ணிசை அரங்கு:
பாட்டு: — சங்கீதபூஷணம் திரு. V.K நடராசா
வயலின்: — திரு S. வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: — திரு S. சிதம்பரநாதன்
சுழலும் சொற்போர்: 'காலங் கடந்த பெரியபுராணத்தின் அழியாத் தன்மைக்குப் பெரிதும் காரணம்' என்ற விடயம்
நடுவர்: கம்பவாருதி இ. ஜெயராஜ்

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

அளவெட்டி, மல்லாகம் ப நோ. கூ. சங்கம்
உரும்பராய், மருதனார்மடம் வீதி, இணுவில்.
(25335)



## புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

BASIC Language in Computer
a Special Course
கூடிய பயிற்சிகளும் செய்முறைப் பயிற்சிகளும் உள்ளடக்கியது
அத்துடன்
Radio T. V. & Deck வகுப்புக்கள்
ஆரம்பம்: 24 - 04 - 1993
(விசேட செய்முறைப் பயிற்சிகளுடன்)
விவரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St, PETER'S LANE, JAFFNA.
(சி-4941)



நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
A/L 95 புதிய பிரிவு
தூய கணிதம்
பிரயோக கணிதம் } திரு. கமலசிங்கம்
ஆரம்பம்: 27 - 04 - 1993
செவ்வாய் 5.00 மணி
(இ-5024)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இங்கிலிஷ் பிறிமியர் 12 அங். கிறைன்டர் இரண்டு, No: 7 அல்லர் ஒன்று, சோமசிறி ஒன்று, 2 அங். 30 அடி சாப்ற் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. குணேந்திரன், இல. 223, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (25318)

### விற்பனையாகின்றது

லீலா சித்திரக்கலண்டர் புதிய லிதோ படங்களுடன் விற்பனையாகின்றது. மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-4940)

### இலவச திருமண சேவை

36 வயது, மகம், பிரான்ஸில் உள்ளவருக்கு மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்கவோ அல்லது கொழும்பில் திருமணமோ செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25306)

### மணமக்கள் தேவை

வடமராட்சி, இந்து. 40 வயது பூரம் 2, பாவம் 13, செவ்வாய் 4 பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு மணமகன் தேவை. வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். 38 வயது, பரணி 4, பாவம் 20, செவ்வாய் 12, கணக்காளர் சகோதரனுடன் மாற்றுச் சம்பந்தமும் செய்யலாம். குறிப்பும் முழு விவரங்களும் அனுப்பவும். இல. 900, மே/பா உதயன். (6123)

### தவறிவிட்டது

கொமிக் என எழுதப்பட்ட மோட்டார் சைக்கிள் திறப்புடன் முக்கிய சாவி கோர்வை டச் வீதிக்கும் நல்லூர் கோவில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: கஸ்தூரியார் வீதி, சதீஸ் ஒளிப்பதிவு கூடத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (25326)

### சாணவிறாட்டி

கணகணப்பூட்டும் சாணவிறாட்டி அடுப்பெரிப்பதற்கு சிக்கனமானது. விறாட்டி விலை ஒன்று ரூபா 1/-. மில்க் வைற். (சி-5015)

## ● அதிசயக் காகம்

கொழும்பு, ஏப். 22

மகாவலி அபிவிருத்தித் திட்டப்பிரதேசத்தில் சிவப்பு நிறக் காகம் ஒன்று காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பறக்கும்போது கடுஞ் சிவப்பு நிறத்திலும் நிற்கும போது இளஞ்சிவப்பு நிறத்திலும் அது காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## கணக்கியல்

பிரத்தியேக வகுப்பு

393/47, கோவில் வீதி, நல்லூர்

**AL/ 95**

ஸ்ரீ B. Com. (Hons)

ஆரம்பம்:

**24 - 04 - 1993**

புதன், வியாழன்
5-30 மணி

குறிப்பு:
முதல் 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

(சி-4936)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L DAY CLASSES**

(காலை 8-00 மணி முதல்
மாலை 2-00 மணி வரை)

இதோ
மீண்டும் ஓர் புதிய பிரிவு - V

**ஆரம்பம்: 22-04-1993 (இன்று)**

★ வாரத்தில் நான்கு நாட்கள் நடைபெறும்.

(சி-4938)

## G. A. Q. | 1st in Com.

யாழ். பல்கலைக்கழகம்
(வெளிவாரி)

இதற்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்:

**24 - 04 - 1993** காலை 9 மணி


S. அருள்நங்கை.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-4934)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 24 | 08 |
| 02 | 05 |
| 1918 | 1986 |

### நாகமணி புவிராஜசிங்கம்

(இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்)

திதி: 22—04—1993

ஆண்டு ஏழு ஆகியும் - என்றும்
உம்மை மறவாது துடிக்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சேனாதிராஜ முதலியார் வீதி,
தம்பாலை,
அச்சுவேலி.

(25321)

## உடுவில் மகளிர் கல்லூரி

(தொடர்கல்வி நிறுவனம்)

பட்டப்படிப்புகள் பிரிவு

**G. A. Q - 94**
யாழ். பல்கலைக்கழகம்

**ஆரம்பம்: 24 - 04 - 1993**
பிற்பகல் 3 மணி

நேர சூசி

| | |
|---|---|
| பொருளியல் | புதன், வெள்ளி 4p.m. |
| தமிழ் | திங்கள்-3p.m., வெள்.-5p.m. |
| இந்துநாகரிகம் | திங்கள், புதன் 5p.m. |
| அரசியல் | செவ்., வியாழன் 3p.m. |
| மெய்யியல் | திங்கள்-4p m., புதன் 3p.m. |
| ஆங்கிலம் | செவ்.- 5p.m., வெள்.-3p m. |
| கிறிஸ்தவநாகரிகம் | திங்கள், புதன் 5p.m. |

— நிர்வாகி.

(சி-5020)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
26—11—1927

மறைவு:
03—05—1992

திதி:
22—04—1993

### அமரர் சீவரட்ணம் இராசதுரை

(முன்னாள் சிலோன் ரேடர்ஸ்-கொம்பனி ஸ்ரோர்ஸ் கீப்பர்)

ஆண்டொன்று கணப்பொழுதில் மறைந்ததப்பா! அன்பொழுகும் தங்கமுகம் மறந்தோமில்லை. தூண்டாத மணிவிளக்கே எங்கள் வாழ்வின் துணைத் தெய்வமே! நாளும், நாளும் துயர்க்கனலில் துடிக்கின்றோமே! வேண்டிடுங்கள் இறைவனிடம் எமதுள்ளத்தின் வேதனைகளை தீர்த்தருள்வீர் என வேண்டுகின்றோம்.


உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டிநிற்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்.
உறவினர்கள், நண்பர்கள்.

யாமா வீதி,
உடுவில் தெற்கு.

(25308)

## இரண்டாவது ஆத்ம அஞ்சலி



மண்ணுலக மொட்டாக நயினையிலே:
20 — 05 — 1921

●

விண்ணுலக சிட்டாக சென்னையிலே:
15 — 04 — 1991

அமரர்

### குமாரசுவாமி நல்லையாபிள்ளை

திதி: 22 - 04 - 1993

பாரைவிட்டு பறந்து எங்கு சென்றீர் தனிமையிலே
வாரமென்ன வருடமென்ன காத்து நிற்போம் -
வழியினிலே
ஊரைவிட்டு போனதும் ஏன் உலகை விட்டே -
போவதற்கா
வேரில்லா மரமானோம் உங்கள் நிழல்தேடி -
நாமெல்லாம்.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
- குடும்பத்தினர்

யாழ்ப்பாணம்.

(25323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்

### படுகொலைக் குழிகள்

சாவகச்சேரிச் சந்தையருகே நிலத்தினடியில் இருந்து சிதைந்த நிலையில் மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் உடைகளும், நகைகளும் மீட்கப்பட்டிருக்கின்றன.

எலும்புக் கூடுகள், மண்டை ஓடுகள், நகைகள், உடைகள் வேறு பொருள்கள் கண்டெடுக்கப்பட்ட இடம் 1987, 1988 ஆம் ஆண்டுப் பகுதிகளில் இந்திய இராணுவத்தினரின் முகாம் அமைந்திருந்த பகுதியாகும். அதனைக் கொண்டு கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள், இந்திய இராணுவத்தினர் கொலை செய்து புதைத்த மக்களினுடையவையே என்று கொள்ள இடமுண்டு.

இந்திய இராணுவம் தமிழ் மண்ணில் நிலை கொண்டிருந்தவேளை, செய்த படுகொலைகள் ஆயிரக்கணக்கானவை. அவர்கள் நடத்திய காட்டுமிராண்டித் தனமான வெறியாட்டத்துக்கு இரையான அப்பாவித் தமிழ் மக்கள் எத்தனைபேர் என்ற சரியான கணக்கு விவரம் இன்னும் தெரியாது. அவர்கள் செய்த தெரிந்த கொலைகளை விடத் தெரியாத கொலைகள் பெரும் எண்ணிக்கையானவையாக இருக்கும்.

இந்திய இராணுவத்தின் அடாவடித் தனங்களின் போது பலர் காணாமற் போயிருந்தனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு சாவகச்சேரியில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளும் நகைகளும் மாதிரிச் சான்றுகள். சாவகச்சேரியில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது ஒரு படுகொலைப் புதைகுழி மட்டுமே தமிழீழம் முழுவதிலும் அத்தகைய ஆயிரக்கணக்கான புதைகுழிகளில் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் எழும்புக்கூடுகள் ''வாசம்'' செய்யும் என்பதில் என்ன சந்தேகம்? தாம் கொலை செய்தவர்களைப் புதைக்காமல், தடயம் தெரியாமல் எரித்துப் பொசுக்கிய எத்தனையோ சுடலை மேடுகளை, தமிழர்கள் மீது வல்லாதிக்கம் செலுத்த வந்த அந்நிய இராணுவம் விட்டுச் சென்றது என்பதை மறந்துவிட்முடியாது.

தெற்கில் ஸ்ரீலங்கா இராணுவ மரணப்படைகள் செய்த கொலைகளினதும், காணாமற் போனவர்களினதும் எண்ணிக்கை அறுபதாயிரம் என்று கணக்குக் கூறப்படுகிறது. ஆனால் தமிழீழத்தில் அடக்கு முறையும், அரக்கத் தனமும் புரிந்த இந்திய இராணுவத்தின் மரணக் குழுக்கள் செய்த படுகொலைகளினதும், காணாமற் போகச் செய்தவர்களினதும் சரியான புள்ளி விவரம் இல்லை. வெறும் குத்து மதிப்பீடாகத் தானும் புள்ளி விவரம் இல்லை.

அப்படி ஒரு புள்ளி விவரத்தைச் சேகரிக்க இப்போதும் காலம் பிந்திவிடவில்லை சாவகச்சேரிப் புதைகுழி கண்டுபிடிப்பும், எலும்புக்கூடுகள் மீட்புமாவது தமிழர் தரப்பின் கண்களைத் திறக்க வேண்டும் அத்தகைய புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டாலே இந்திய இராணுவம் தமிழ் மண்ணில் நடத்திய அக்கிரமத்தை உலகத்துக்கு நிரூபித்துக் காட்டலாம்.

ஈழத் தமிழர்களுக்கு உதவுவதாக, அவர்களின் நலன்களில் அக்கறை கொண்டதாகப் பாசாங்கு செய்து தமிழ் மண்ணில் தனது இராட்சத இராணுவ வல்லாதிக்கக் காலைப் பதித்த இந்தியா, அவர்களின் நலன்களுக்கு விரோதமாகச் செயற்பட்டது மட்டுமன்றி, தமிழர்களைக் கொன்று குவித்த மரணப்படையாகவும் செயற்பட்டது என்பதையும் சர்வதேசங்களுக்கும் அத்தாட்சி பூர்வமாக எடுத்துச் சொல்ல முடியும். இந்தியாவின் ஆசாடபூதித் தனத்தை அம்பலப்படுத்த முடியும். அதன் பாசாங்கையும் மூடு திரையையும் கிழித்தெறிய உதவும்.

# நடாளுமன்ற கூட்டத் தொடரை இன்று பிரேமதாஸா ஆரம்பித்து வைப்பார்

## பகிஷ்கரிக்க எதிர்க்கட்சிகள் முடிவு

கொழும்பு, ஏப் 22

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் இன்று வியாழன் காலை 10-30 மணியளவில் ஜனாதிபதி பிரேமதாஸாவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

மேற்படி அங்குரார்ப்பண நிகழ்சசியை பகிஷ்கரிப்பது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்திருக்கிறது.

நேற்று பிற்பகல் நடைபெற்ற கட்சியின் முக்கிய கூட்டம் ஒன்றில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் போக்கில் எவ்வித மாற்றமும் காணப்படாததால் தமது கட்சி இத்தகைய முடிவை எடுத்ததாக அக்கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பியும் சட்டத்தரணியுமான நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்தார்

எனினும் அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் இடம் பெறும் அவசரகால நிலை நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் தமது கட்சி பங்குபற்றும் என அவர் கூறினார்.

தமது கட்சியின் முடிவை ஏனைய எதிர்க் கட்சிகளுக்கும் தெரிவித்து தமது நடவடிக்கைக்கு அவற்றின் ஆதரவைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் சொன்னார்.

கடந்த தடவை நாடாளுமன்றக் கூட்டத்தொடரை — இரண்டாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரை — அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி பிரேமதாஸா உரையாற்றிய போது, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவரை உரையாற்ற விடாமல் கூச்சலிட்டு குழப்பம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய அங்குரார்ப்பண வைபவத்தைத் தொடர்ந்து மூன்று புதிய எம்.பிக்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்படுகிறது

ஐ.தே. கவின் கொழும்பு மாவட்ட எம். பியாக அனுரா பஸ்தியானும் —

ஸ்ரீ. ல. சு. கவின் காலி மாவட்ட எம். பியாக திருமதி அமரகீர்த்தியும் —

ஸ்ரீ. ல. சு. கவின் குருநாகல் மாவட்ட எம். பியாக பந்துல பஸநாயக்காவும் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வர். (உ-எ-6)

## வாக்குகள் எண்ணும் நிலையங்களுக்கு

# வாக்குப் பெட்டிகளை பொலீஸார் கொண்டு செல்ல அனுமதிக்காதீர்

### எதிர்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 22

வாக்களிக்கும் நிலையங்களில் இருந்து வாக்குகள் எண்ணப்படும் இடங்களுக்கு வாக்குப்பெட்டிகளை எடுத்துச் செல்லும் பொறுப்பை எக்காரணம கொண்டும் பொலீஸாரிடம் ஒப்படைக்கக் கூடாது.

எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து அவரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

முன்னைய தேர்தல்களின் போது இவ்வாறு வாக்குப் பெட்டிகள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டபோது அப் பெட்டிகளுக்குள் புதிதாக வாக்குச் சீட்டுகள் திணிக்கப்பட்டன என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் இத்தகைய கோரிக்கையை தாங்கள் இம்முறை முன்வைத்திருப்பதாக எதிர்க்கட்சிப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குகள் எண்ணப்படும் இடங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும்போது எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் கூடவே செல்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் எதிரணியினர் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளனர். (உ-6)

## ஆலயங்களில்

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய திருக்கல்யாண வைபவம் இன்று வியாழன் மாலை 5-30 மணிக்கு நடைபெறும்.

இரவு 8 மணிக்கு கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா ''பார்வதி திருக்கல்யாணம்'' என்னும் விடயம் பற்றி பக்க வாத்தியம் சகிதம் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ)

o o o

தென்மராட்சி, ஏப். 22

சாவகச்சேரி நுணாவில் குளம் முருகப்பெருமான் ஆலயத்தில் திவ்விய ஸ்கந்த மகாயாகம் நாளை நடைபெறும். மகாயாகப் பூசைகள் இன்று காலை ஆரம்பமாகவுள்ளன. (உ-117)

## மோட்டார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பதை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் மோட்டார் ஊர்தி உரிமையாளர்களுக்கு அறியத் தந்துள்ளனர் (உ-5)

## ஆனையிறவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினருக்கு உதவியாக கறுக்காய் கடற்பரப்பில் இருந்து கடற்படையினரின் நான்கு நீருந்து விசைப்படகுகள் கடல் வழித் தாக்குதல்களை நடத்தின. அவற்றிலிருந்து பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

மற்றும் இரண்டு பொம்மர்களும், புக்காரா விமானம் ஒன்றும், ஹெலிக்கொப்டர்களும் வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டன. அவை பீரங்கி மற்றும் பலரகக்குண்டுகளை வீசித்தள்ளின.

முன்னேற முயன்ற படையினரின் டாங்கிகளில் இருந்தும், ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும் தரைவழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஷெல் தாக்குதல்கள் விடாது மேற்கொள்ளப்பட்டன; துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

இவற்றின் மத்தியிலும் இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதலை நடத்தினர். இதனால் இராணுவத்தினர் தமது முன்னேறும் முயற்சியை கைவிட்டு இழப்புக்களுடன் தமது நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

(உ-எ-5-6-15-17-117-ரி)

# யாழ். போதனா ஆஸ்பத்திரி இப்போதைக்கு இடம் மாறாது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை, யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடம் அமைந்துள்ள திருநெல்வேலிக்கு மாற்றும் திட்டம் இப்போது நடைமுறைக்கு வராது.

குடாநாட்டு நிலைமை சீராகி, அமைதி திரும்பிய பின்னரே இந்த இடமாற்றத் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருவது என முன்னர் இணக்கம் காணப்பட்டதாக யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

யாழ். ஆஸ்பத்திரியை, தற்போது அது இருக்கும் இடத்தில் இருந்து மூன்று மைல் தொலைவில் யாழ் பல்கலைக் கழகத்துக்கு அருகில் இடமாற்றம் செய்யப்பட இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியை இலங்கை வானொலி தனது செய்திக் கண்ணோட்ட நிகழ்ச்சியில் முக்கியத்துவம் கொடுத்து அறிவித்தது.

அது பற்றிக் கேட்டபோதே யாழ் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மேற்கண்டவாறு தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட வட்டாரங்களிடம் இது குறித்து விசாரித்த போது—

யாழ் போதனா வைத்திய சாலை திருநெல்வேலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டாலும், பொது வைத்தியசாலை தற்சமயம் இயங்கும் இடத்திலேயே இயங்கும்—

மருத்துவபீடத்துக்கு அருகில் போதனா வைத்திய சாலையை இயக்கவும், பொது வைத்தியசாலையைத் தொடர்ந்து தற்சமயம் உள்ள இடத்தில் இயக்கவும் கொழும்பில் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது — என்று தெரிவித்தன.

### எவ்வித தகவலும் இல்லை

யாழ். போதனா வைத்திய சாலையை இப்போது இயங்கும் இடத்தில் இருந்து வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்வது குறித்து எந்தவித தகவலும் தமக்கு கிடைக்கவில்லை என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்களின் அவசரத் தேவைகளை இந்த வைத்தியசாலைக்கு உரிய பாதுகாப்பை வழங்கிவருகிறோம்—

இதுதொடர்பாக இருபகுதியினருடனும் மேற்கொண்ட இணக்கத்தின் அடிப்படையில் நாம் செயற்படுகிறோம்—

ஆஸ்பத்திரியை வேறு இடத்துக்கு மாற்றும் திட்டம் ஏதும் வந்தால், அது குறித்து இரு பகுதியினருடனும் (விடுதலைப் புலிகளுடனும், அரசுடனும்) பேச்சு நடத்தி தொடர்ந்து அதே இடத்தில் இயக்க வைக்க முயற்சி எடுப்போம்— என்றும் அந்த அதிகாரி கூறினார். (அ-எ 3-5)

# 90 பேர் உயிரிழந்த சம்பவம்; அமெ. அதிகாரிகள் காரணம்!

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் மதப்பிரிவு ஒன்றைச் சேர்ந்த 90 பேர் ஒன்றாகத் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவத்துக்கு அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினரே காரணம் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

அந்தச் சம்பவத்தில் தப்பிய ஒருவரே இக்குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட கட்டடத்தை முற்றுகையிட்டிருந்த எவ் பி. ஐ. அதிகாரிகள் யுத்த டாங்கிகளைப் பயன்படுத்தி கட்டடத்தை தகர்த்த போது கட்டடத்துக்குள் இருந்த மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று வெடித்து எங்கும் தீ பரவியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் அந்தச் சம்பவத்துக்கு மேற்படி மதப்பிரிவுத் தலைவர் டேவிட் கொறஸ் தான் காரணம் என்று புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டடத்துக்குள் இருந்த குழந்தைகளை வெளியேற்ற அவருக்கு 51 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இச் சம்பவம் பற்றி பூரண விசாரணை நடத்தப்படும் என அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அறிவித்துள்ளார்.

ஆரம்பம் தொடக்கம் இவ் விடயத்தில் எவ் பி.ஐ அதிகாரிகள் தவறாகச் செயற்பட்டதாக ''நியூயோர்க் டைம்ஸ்'' பத்திரிகை குறிப்பிட்டது (உ-6)

# பட்டப்படிப்பின் கல்வி டிப்புளோமா நேர்முகப் பரீட்சை 27, 28 இல்

யாழ்ப்பாணம், ஏப் 22

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித் துறையினால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்புளோமா பாடநெறிக்கு 1993 — 94 ஆம் கல்வி ஆண்டுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் யாழ் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

மருதனார் மடம், யாழ்ப்பாணம், வேலணை ஆகிய கோட்டங்களுக்கு 27 ஆம் திகதியும் —

வடமராட்சி, பண்டத்தரிப்பு, சாவகச்சேரி ஆகிய கோட்டங்களுக்கு 28 ஆம் திகதியும் — மேற்படி தேர்வு இடம்பெறும் என யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சிக்கு இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாத ஆசிரியர்களும் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களும் எதிர்வரும் 25 ஆம் திகதியன்றும் அதற்கு முன்னரும் தமது விண்ணப்பங்களை ''அதிபர், யாழ் இந்து மகளிர் கல்லூரி'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்

தாமதமாகி விண்ணப்பிப்பவர்களுக்கு எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நேர்முகத் தேர்வை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இறக்குமதி

கொழும்பு, ஏப். 22

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் 10 ஆயிரம் பசு மாடுகளை இங்கிலாந்து தவிர்ந்த ஏனைய வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அரசு முடிவுசெய்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தமிழக சட்டசபையில் அமளி, துமளி; கண்ணீர்விட்டு அழுகை

# பெண் எம்.எல்.ஏக்கள் உட்பட எதிரணியினர் பலர் நேற்று நையப்புடைக்கப்பட்டனர்!

### காங்கிரஸ், தி.மு.க. உறுப்பினர்கள் கைது செய்யப்படுவராம்

சென்னை, ஏப் 22

தமிழக சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் மாலை முதல் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த காங்கிரஸ் உட்பட எதிர்க் கட்சியினர் நேற்று அவையில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

அவர்கள் சபையில் இருந்து வெளியேற்றப்பட்ட போது சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

பேரவைக் காவலர்கள் தம்மை மாறி மாறித் தாக்கியதாக தி.மு.க. உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி கண்ணீர் மல்கக் கூறிப் புலம்பினார்.

அவரைக் காப்பாற்றச் சென்ற தங்கள் மீதும் அடிகள் விழுந்ததாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களான திருமதி ரமணி நல்லதம்பி, திருமதி லோகாம்பாள் ஆகியோர் தெரிவித்தனர்.

**இரவிலும் போராட்டம்**

இச் சம்பவங்கள் தொடர்பாக இந்திய வானொலி வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

தமிழக சட்டசபைக்குள்ளே நேற்று முன்தினம் பிற்பகல் இந்திரா காங்கிரஸ் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆரம்பித்த உள்ளிருப்பு உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் இரவு முழுவதும் தொடர்ந்தது.

பத்திரிகையாளர்களும் சட்டசபையில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் இரவு முழுவதும் அமர்ந்து கொண்டு நிலைவரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

''சட்டசபையில் ஜனநாயக மரபுகளைப் பாதுகாக்க வேண்டும். எதிர்க்கட்சியினரை மரியாதையாக நடத்த வேண்டும்'' — என்ற கோரிக்கையை முன் வைத்து இந்த உள்ளிருப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

**கம்பராமாயணச் சொற்பொழிவு**

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்கள் மத்தியில் கம்பராமாயணம் பற்றி, இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் குமரி அனந்தன் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

எதிர்க் கட்சியினரின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு மத்தியில் நேற்றுக் காலை 10 மணிக்கு சட்டப் பேரவை கூடியது.

சபாநாயகர் சபைக்கு வந்து தம் கூட்ட ஆரம்பத்தில் வழக்கமாக சபாநாயகர் வாசிக்கும் திருக்குறளை வாசிக்கக் கூடாது என்று எதிரணியினர் குரல் எழுப்பினர்.

**சாத்தான் வேதம் ஓதுவதா?**

''நீதி கிடைக்காதபோது குறளைப் படிப்பது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது'' என்று அவர்கள் சத்தமிட்டனர்.

கேள்வி நேரத்துக்குப் பின்னர், தமது பிரச்சினையைப் பற்றிப் பேச எதிர்க்கட்சித் தலைவருக்கு தாம் அனுமதி வழங்குவதாக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா குறிப்பிட்டார்.

ஆனாலும் எதிரணியினர் அடங்கவில்லை, கோஷங்கள் அதிகரித்துக் கொண்டே போயின.

அதனையடுத்து, எதிர்க்கட்சித் தலைவரை சபையில் இருந்து வெளியேறும்படி சபாநாயகர் உத்தரவிட்டார். அதற்கு அவர் மறுக்கவே சபையில் குழப்பம் மேலும் அதிகரித்தது.

**வெளியே தூக்கிச் சென்றனர்**

இதைத் தொடர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேறும்படி சபாநாயகர் பணித்தார். அதற்கு அவர்கள் மறுக்கவே சபைக் காவலர்களை சபாநாயகர் அழைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உட்பட பல உறுப்பினர்கள் குண்டுக் கட்டாக அவையில் இருந்து வெளியே தூக்கிச் செல்லப்பட்டனர்.

இதனை ஆட்சேபித்து பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் வெளிநடப்புச் செய்தார். தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், எம். ஜி. ஆர், அ. தி. மு. க உறுப்பினர் திருநாவுக்கரசு ஆகியோரும் சபைக் காவலர்களினால் வெளியேற்றப்பட்டனர்.

அவையில் இருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களை சட்டசபை வளாகத்தில் இருந்தும் வெளியேற்ற வேண்டும் எனச் சபாநாயகர் ஆணையிட்டதும் அந்த வளாகத்தில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன.

**வீதி மறிப்பு போராட்டம்**

சட்டசபையில் ஜனநாயகத்தின் குரல் நெரிக்கப்பட்டுவிட்டது எனக் குற்றஞ்சாட்டி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பின்னர் கோட்டைக்கு முன்னால் உள்ள சாலையில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்விடுவிக்கப்பட்டனர்.

''இந்த மாதிரியான அநியாயம் எப்போதும் நடந்ததில்லை'' எனப் பேரவையில் பல்லாண்டு காலமாக அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சி மூத்த உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் கூறினார்.

சட்டசபைக்காவலர்களைத் தாக்கியதாகக் கூறப்படும் குற்றத்திற்காக காங்கிரஸ் உறுப்பினர்கள் ஞானசேகரன், ராஜேந்திரன் மற்றும் தி.மு.க. உறுப்பினர் பரிதிஇளம்வழுதி ஆகியோர் கைது செய்யப்படுவர் என் முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

உ-எ-க 5)

## ஊரடங்கின் மத்தியிலும் பொருள்கள் இறக்கப்பட்டன

நெல்லியடி, ஏப். 22

திருகோணமலையில் இருந்து நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'வாதுவ' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றைய தினமே ஆரம்பமாகின.

குடாநாட்டில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று எவ்வித தடங்கலும் இன்றி நடைபெற்றன.

புதுவருடத்திற்கு முன்னர் பருத்தித்துறையில் மண் எண்ணெய் மற்றும் தபால் பொதிகளை இறக்கிய பின்னர் காங்கேசன்துறையில் கடந்த ஒரு வாரமாக தரித்து நின்ற இக் கப்பல் தண்ணீர் எடுப்பதற்காக திருகோணமலை சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளபோது, கப்பலில் இருந்து பொருள்கள் இறக்க மட்டும் அனுமதி வழங்கப்பட்டதாகவும் — இறக்கப்பட்ட பொருள்களை வாகனங்கள் மூலம் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லாமல் அவற்றை பருத்தித்துறைக் களஞ்சியத்திலேயே களஞ்சியப்படுத்துமாறு கோரப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(அ-3-109)

## குமாரி புறப்பட்டது

நெல்லியடி, ஏப் 22

பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமாரி' கப்பலில் இருந்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணி வரை பொருள்கள் இறக்கப்பட்டன. பொருள்கள் இறக்கி முடிக்கப்பட்ட பின்னர் கப்பல், தபால் பொதிகளை ஏற்றிக் கொண்டு திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

இந்தக்கப்பலில் இருந்து கூடுதலான பொருள்களை குறைந்த நாட்களில் இறக்கி, துறைமுக தொழிலாளர் சாதனை புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-3-109)

## மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஏப். 22

நேற்று ஆனையிறவை அண்டிய பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து கணிசமானளவு மக்கள் இடம் பெயர்ந்தனர்.

தர்மக்கேணி, பேராவில், காரயம்பதி, முகாவில், இத்தாவில் மற்றும் பளைப் பகுதியை அண்டிய பிரதேச மக்களே இடம் பெயர்ந்தனர்.

(உ-15)

## தேர்தலுடன் தொடர்பு ஏதும் இல்லையாம்

வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளுக்கும் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தல்களுக்கும் எதுவிதத் தொடர்புமில்லை.

— இவ்வாறு கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டதாக பி. பி. ஸி. அறிவித்தது

தேர்தலை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிட்டதாக பி. பி ஸி. அறிவித்தது.

தேர்தல் ஜுரம் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

மாகாணசபைத் தேர்தலில் மேல் மாகாணத்தில் அரசு தோல்வியடையும் என்பதை அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் முன்கூட்டியே ஒப்புக் கொண்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் அரசு மிகப் பயங்கரமான நிலையை எதிர்நோக்குகிறது.

இத்தகைய தோல்வியைத் தவிர்ப்பதற்காக அரசு புதிய யுக்தி ஒன்றை நாடியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

வெடிமருந்து ஆயுதங்களுடன் புலிகள் குழு ஒன்று கொழும்புக்கு வந்திருக்கிறது என்ற புரளியைக் கிளப்பி அதன் மூலம் பெரும் பதற்ற நிலையைத் தோற்றுவிப்பதே அரசின் திட்டமாகும். அந்தப் பதற்ற நிலையைப் பாவித்து தேர்தலை அரசு தவிர்க்க முடியும்.

— இவ்வாறு விமர்சகர் ஒருவரை மேற்கோள் காட்டி பி. பி. ஸி அறிவித்தது

உண்மையில் இலங்கையில் பெரும் குண்டுவெடிப்புத் தாக்குதல்களை நடத்தக்கூடியவர்கள் இரு சாரார்கள் தான். ஒன்று விடுதலைப் புலிகள் மற்றையது அரசாங்கம். — இவ்வாறு அந்த விமர்சகர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(உ-6)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு 26 புதிய டாக்டர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எதிர் வரும் திங்கட்கிழமை முதல் 26 புதிய டாக்டர்கள் பதவியேற்பார்கள்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பயின்று கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற இறுதி ஆண்டுப் பரீட்சையில் சித்தி அடைந்த 56 பேர்களில் 26 பேர் திங்கட்கிழமை தொடக்கம் யாழ். ஆஸ்பத்திரியில் பணிபுரிவர்.

இந்த 26 பேரும் தமது உள்ளகப் பயிற்சியையும் யாழ். ஆஸ்பத்திரியிலேயே பெறுவர். இவர்களது நியமனத்தால் யாழ். ஆஸ்பத்திரியில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை ஓரளவு நீங்கும் என்று ஆஸ்பத்திரி நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-3)

இயக்கச்சிப் ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் பரபரப்பு நிலவியது.

ஆனையிறவை அண்டிய பகுதிகளில் தாக்குதல் நடத்துவதற்காக அப்பகுதிகளில் அடிக்கடி வட்டமிட்ட விமானங்களினால் பளை, கொடிகாமம் வரையான பகுதிகளில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஏப். 22

மட்டக்களப்பு மாவட்டம் கரடிக்குளம் என்னுமிடத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 4-20 மணியளவில் இராணுவத்தினர் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாக அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன.

ஆலங்குளம் பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதியை நோக்கியே இத்தாக்குதல் நடத்த பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோமலிங்கம் இராசமணி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமலிங்கத்தின் மனைவி இராசமணி காலமானார்.

இவர் சிவகுரு தம்பதிகளின் மகளும், தாமோதரம் பிள்ளை, காலஞ்சென்ற ஏகாம்பரம், தனநாயகம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22-04-93) காலை 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தனநாயகம்
(சகோதரன்)

சுப்பிரமணியம் றோட்,
அரியாலை.

(25339)

### தம்பிராசா குலநாயகம்

சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த தம்பிராசா குலநாயகம் நேற்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் செல்வநாயகியின் அன்புக் கணவரும், சுகிர்தமலர், பொன்மலர், குலேந்திரன், இராசகுலம், சிற்றம்பலம் (வவுனியா S.V.R. மில்), குலசிங்கம் (டென்மார்க்), இராசமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரத்தினம், பூரணச்சந்திரன், சந்திரலீலா, பகவதி, இந்திராணி, சிவசக்தி, இ. செல்வராசா ஆகியோரின் மாமனும், ஜெயந்தினி, சிவச்சந்திரன், குமுதினி, லவீந்திரா, பிரேந்திரா, தபோதினி, இராகுலன், விலாசினி, கோகுலன், யாழினி, கோபிநாத், வினோதா, ரோபன், அர்சனா, செந்தூரன், சாரங்கன் நிரோசன் ஆகியோரின் பேரனும், நிதர்சனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 2 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. இராசகுலம் [மகன்]
சி. நவரத்தினம் [மருமகன்]

ஐயனார் கோவிலடி,
சண்டிலிப்பாய்.
(25341)

மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம்பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org